பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை

# வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று

சங். 118:22

மாத இதழ்

ஜுன் 2014 மலர் 15 இதழ்: 02



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதர, சகோதரிகளுக்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையால் 2014-ம் வருடத்தின் 6-ம் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறபடியால் அவருக்கு கோடி ஸ்தோத்திரம். இந்நாள்வரையும் தேவன் நம்மை காத்து வருகிற கிருபைக்காகவும் கடந்த மாதம் சபையின் ஊழியங்கள், ஆதாதனைகள் எல்லாவற்றையும் ஆசீர்வதித்தபடியினாலும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

கோராகின் மைந்தர்கள் எழுதிய சங்கீதங்களில் ஒன்று தான் 84-வது சங்கீதம். இவர்கள் செய்த அர்ப்பணத்தின் வாசகங்களை பாருங்கள் “ஆகாமியர் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப் பார்க்கிலும்... என் தேவனுடைய வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன்” (சங். 84:10). இவர்கள் செய்த ஊழியம் தேவாலய வாசற்படியை காப்பது (Watchman). ஆனால் இதை எல்லாவற்றைப் பார்க்கிலும் பாக்கியம் அல்லது நல்லது என்று சந்தோஷப்பட்டார். நமக்கும் அப்படிப்பட்ட சந்தோஷம் உண்டா! தாங்கள் செய்கிற ஊழியங்களில் மகிழ்ச்சி உண்டா! அல்லது மற்றவர்களைப் பார்த்து குறை கூறிக் கொண்டேயிருக்கிறோமா! இவர்கள் எழுதிய மற்றொரு சங்கீதம் 45. இதில் “நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர்: ஆதலால் தேவனே உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தால் அபிஷேகம் பண்ணினார்” என வேத வாக்கியம் எழுதி வைத்தார்கள். கோராகின் மைந்தர்களைப் போல அபிஷேகம் பண்ணப்பட்ட தேவனுடைய ஊழியர்களுக்கு விரோதமாய் தீது பேச்சும், புறங்கூறுதல் போன்ற அக்கிரமங்களை வெறுத்து விட்டுவிட்டு நீதியை சிநேகிப்பவர்களாய் இருந்தால் நாமும் ஆனந்த தைலமாகிய பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டு, மற்றவர்களை ஆசீர்வதித்திட முடியும்.

இன்னும் அதிகமாய் சங்கீதம் 42-ம் கூட கோராகின் புத்திரரால் எழுதப்பட்ட சங்கீதமாகும். **“மானானது நீரோடையை வாஞ்சித்து கதறுவதுபோல தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்து கதறுகிறது”** (சங். 42:1). இவர்களுக்கு தீராத தாகமாயிருந்தபடியால் ஜீவனுள்ள தேவனை பற்றியே இருந்தபடியால் மற்றவர்களுக்கு விரோதமாய் தீதுபேசி புறங்கூறிட இவர்களுக்கு நேரமேயில்லை. விசேஷமாய் இவர்களுக்கு மோசேக்கு விரோதமாய் தீது பேசி புறங்கூற நேரமில்லை. அதைப்போலவே எலிசா அர்ப்பணிப்பின் ஆவி உடையவனாக இருந்தான். அபிஷேகம் பண்ணப்பட்ட எலியாவைவிட்டு எலிசா பிரிந்து செல்வதற்கு மூன்று சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. ஆனால் எலிசாவோ தனது அர்ப்பணிப்பில் உறுதி கொண்டவராய் “நான் உம்மை விடுகிறதில்லை” (2இராஜா. 2:2-6) என உறுதிபட கூறினான். அவரைப்போலவே நகோமியை விட்டு விடுவதற்கு ரூத்திற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ரூத்தோ நகோமியோடு இருப்பதற்கு “மன உறுதியாய் இருந்தாள்” (ரூத். 1:14-18).

யாக்கோபு வேர்பற்றி; இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும். ஏசா. 27:6

இந்த கடைசி நாட்களில் தேவ மனுஷனாகிய ஆபிரகாமைவிட்டு லோத் விலகியது போல அபிஷேகம் பண்ணப்பட்ட தேவ மனுஷர்களைவிட்டு அநேகர் விலகும் காலம் இது. நாம் தேவ மனிதர்களோடு சேர்ந்து நிற்பதின் ஒரே நோக்கம் நாம் இன்னமும் நம் ஆண்டவரை நெருங்கி சேருவதற்கும், அவரை பின்பற்றுவதற்கும் எந்த மனுஷனையும் ஒட்டிக் கொள்ளாமல் ஆண்டவரோடு ஒட்டி இணைந்து வாழ்வதற்குமேயாம். பிரியமானவர்களே! கோராகின் புத்திரரைப்போல, எலிசா, ரூத்தைப் போல அபிஷேகம் பண்ணப்பட்ட தேவ மனிதர்களோடு சபையோடு இணைந்து தேவ ராஜ்ஜியத்தை ஒரு குடும்பமாக கட்டுவோம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக. “இதோ சீக்கிரமாய் வருகிறேன்: அவனவன் கிரியைகளில் அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடு கூட வருகிறது” (வெளி. 22:12). மாரநாதா.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**

---

**இன்றைய தகவல்**

## காற்று வாங்க போனேன்

இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் குடிநீர் தட்டுப்பாடு அதிகரித்து வரும் நிலையில் காற்றிலிருந்து குடிநீர் உற்பத்தி செய்யும் புதிய இயந்திரம் ஒன்றை இஸ்ரேல் தயாரித்துள்ளது . **“ஜீனியஸ் ஹீட் எக்ஸ்சேஞ்சர்”** என்ற இந்த இயந்திரத்தை வாட்டர்–ஜென் என்ற நிறுவனம் தயாரித்துள்ளது. இதன் மூலம் தற்போது ஒரு லிட்டர் தண்ணீர் பாட்டிலுக்கு ரூ15 செலவாகும் நிலையில், வெறும் ரூ1.50 காசுகளில் ஒரு லிட்டர் சுத்தமான குடிநீரை உற்பத்தி செய்ய முடியும்.

இந்த இயந்திரம் இயங்கும் செயல்முறை பற்றி இந்நிறுவனத்தின் சி.இ.ஓ. கோகவி கூறுகையில், இயந்திரத்திலுள்ள **“ஜீனியஸ் ஹீட் எக்ஸ்சேஞ்சர்”** வழியாக காற்று செலுத்தப்படுகிறது. அப்போது சுத்தமான காற்றில் இருக்கும் ஈரப்பதம் அகற்றப்படுகிறது. பிறகு நீராவியானது திரவ வடிவமாக மாறி காற்றிலிருந்து நீரானது பிரிகிறது. அந்த நீர் இயந்திரத்திற்குள் இருக்கும் சிறிய டேங்க் மூலமாக சேகரிக்கப்படுகிறது. அதன் பிறகு சேகரிக்கப்பட்ட நீர் **“எக்ஸ்டென்சிவ் வாட்டர் பில்ட்ரேஷன் சிஸ்டம்”** வழியாக ரசாயனம் மற்றும் நுண்ணுயிர் கிருமிகள் வடிகட்டப்பட்டு சுத்திகரிக்கப்படுகின்றது. வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைப் பொறுத்து இந்த இயந்திரத்தின் மூலம் ஒரு நாளைக்கு 250 முதல் 800 லிட்டர்கள் வரை குடிநீரை உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கின்றனர்.

**– அஹமதி தமிழ் திருச்சபை**

---

## சிரி.... சிந்தி

**படைத்தவனிடம் தொடர்பு கொள்ளும்போது படைப்புகளிடம் தொடர்பு கொள்ளலாமா!** (Mobile switch off)

**– அஹமதி தமிழ் திருச்சபை**

# மூலைக்கல்



"வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்கு தலைக்கல்லாயிற்று" (சங்.118: 22; மத். 21:42; மாற். 12:10). கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே! கிறிஸ்துவுக்குள் உங்களை வாழ்த்துகிறேன். மனுக்குலத்தை இரட்சிக்க வந்த இயேசுவை பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் உடன் பிறந்த சகோதரர்கள் ஒதுக்கி தள்ளினார்கள், ஆசாரியர்கள் அன்னா, காய்பா, ஏரோது, பிலாத்து இன்னும் அநேகர் இயேசுவை ஒதுக்கி தள்ளினார்கள். ஆனால் பிதாவோ "இயேசுவை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார்" (பிலி. 2:9-11).

1. தாவீது :- (1சாமு.16: 11-13; 17:28-29, 33, 42; 30:1-6; 2சாமு. 2:4) வீடுகட்டும் கட்டிட வேலையாள், கொத்தனார் கட்டிடத்திற்கு சரியில்லாத கற்களை தூக்கி வீசி எறிந்து விடுவான். காரணம் அது சுவற்றிற்குள் ஒத்து வராத அளவு கோணலும் பிதுங்கியும் இருக்கும். எனவே அந்த கொத்தனார் அதை எறிந்து விடுவான். அதுபோல தாவீதுடைய வாழ்க்கையில் குடும்பத்தாரால் தள்ளிவிடப்பட்டவன். குடும்பத்திலுள்ள தன் சகோதரர்கள் எல்லாரும் அரசாங்கத்திலும், இராணுவத்திலும் அரச துறையிலும் வேலை பார்க்கிறவர்கள். ஆனால் தாவீதோ ஆடுகளை மேய்க்கவும், வனாந்திரத்தில் அலைந்து திரிகிறவனாகவும் எல்லாராலும் ஒதுக்கப்பட்டவனாக தள்ளிவிடப்பட்டான்.

சாமுவேல் தீர்க்கதரிசி, ஈசாயின் குடும்பத்தில் வந்து இஸ்ரவேலை ஆளுகைசெய்ய அவன் பிள்ளைகளில் ஒருவனை ராஜாவாக அபிஷேகம் பண்ண வந்தபோது, ஈசாயின் பிள்ளைகள் ஒவ்வொருவராக அவனுக்கு முன்பாக வந்தனர். கர்த்தர் ஒருவனையும் அபிஷேகிக்க சாமுவேலுக்கு அனுமதி தரவில்லை. உன் பிள்ளைகள் இவ்வளவுதானா என்று சாமுவேல் கேட்க, இன்னும் ஒருவன் இருக்கிறான், அவன் வனாந்திரத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டு இருக்கிறான் என்றான். குடும்பத்தாரால் தள்ளப்பட்ட இந்த தாவீதை தான் கர்த்தர் இஸ்ரவேலை ஆளுகை செய்ய இராஜாவாக தெரிந்து கொண்டார். யாரை ஆகாதவன் என்று தள்ளினார்களோ அவனையே கர்த்தர் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார். சமஸ்த இஸ்ரவேலையும் 40 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார்.

அன்பானவர்களே! நாமும் கூட குடும்பத்தாரால் ஒதுக்கி தள்ளப்பட்டிருப்போம், உறவினர்களால் நண்பர்களால் சமுதாயத்தில் உலகத்தின் மத்தியில் வேலை ஸ்தலத்தில், அதாதவன் என்றும், இவனால் நமக்கு என்ன பலன் என்றும், பிரயோஜனம் அற்றவன் என்றும், எதற்கும் பயன்படாதவன் என்றும், ஏளனமாக எண்ணியிருக்கலாம், எல்லாராலும் தள்ளப்பட்டு நிலையில் இருக்கலாம். இயேசு சொல்லுகிறார், எல்லாராலும் தள்ளப்பட்டு, ஒதுக்கப்பட்டு, கல்லைப் போல இருக்கிற உன்னை கர்த்தர் தலைக்கல்லாக மாற்றப் போகிறார். பயனற்ற உங்களை அநேகருக்கு பயனுள்ள

கொடியவன் அற்றுப்போவான்; சக்கந்தக்காரன் இல்லாமற்போவான். ஏசா. 29:20

பாத்திரமாக எடுத்து பயன்படுத்துவார். ஒதுக்கப்பட்ட உங்களை அநேகரை ஆளும் அதிகாரத்தை, பொறுப்பை கர்த்தர் தருவார். விசுவாசியுங்கள்! தேவ பிள்ளைகளே தாவீதின் தேவன் உங்களுடைய தேவன். ஆடுகளின் பின்னே வனாந்திரத்தில் அலைந்து திரிந்த தாவீதை அரசனாக்கிய கர்த்தர், உங்களை உயர்த்த ஆசீர்வதிப்பார்.

2. யோசேப்பு:- (ஆதி. 37: 1-28) யோசேப்பு தன் சகோதரர்களால் தள்ளப்பட்டார், தன் தகப்பனால் கடிந்து கொள்ளப்பட்டார்.

- சகோதரர்கள் பகைத்தார்கள் (வசனம் 4,5,8)
- தகப்பனும் கடிந்துக் கொண்டார் (வசனம் 10)
- கொலை செய்ய சதி பண்ணினார்கள் (வசனம் 18)
- தண்ணீரற்ற குழியிலே போட்டார்கள் (வசனம் 24)
- 20 வெள்ளி காசுக்கு மீதியானியரிடம் விற்றுப் போட்டார்கள் (வசனம் 28)
- பாவ சோதனை (ஆதி 39:9)
- அபாண்டமான பழி (39:15)
- சிறை தண்டனை (39:20)

கர்த்தர் யோசேப்போடே இருந்தார் (ஆதி. 39:21)

பார்வோனின் சொப்பனத்திற்கு யோசேப்பின் மங்களகரமான பதில் மூலம் கர்த்தர் யோசேப்பை உயர்த்தினார். ஆதி. 42:39-44. மிகப் பெரிய உயர்வு - எகிப்த்திற்கு அதிகாரி. இது கர்த்தராலே ஆயிற்று. என் அன்பு தேவ பிள்ளைகளே! நீங்களும் இப்படி சகோதரர்களால் குடும்பத்தாரால் உறவினர்களால் ஒதுக்கப்பட்டு தள்ளப்பட்ட நிலையில் இருக்கிறீர்களா! வீண் பழிகள் அபாண்டமான பழிகள் அவமானங்கள் சொல்லாத பாவ பழிகள் உங்கள் மேல் சுமத்துகிறார்களோ! கவலைப்பட்டு, கலங்காதிருங்கள்: விசுவாசமாய் இருங்கள். நீங்கள் நம்புகிற இயேசு பெரியவர். யோசேப்பின் தேவன் நம்முடைய தேவன். யோசேப்பை உயர்த்தினது போல உங்களையும் உயர்த்துவார். உங்கள் கண்ணீர் கவலை துக்கம் வேதனை யாவையும் மறக்கும்படியாக கர்த்தர் உங்களை உயர்த்துவார்.

நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கு சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும் என்ற மோசேயின் ஜெபத்திற்கு பதில் கொடுத்தது போல நாம் கண்ட துன்பங்கள், வேதனைகளுக்கு சரியாக நம்மை கர்த்தர் மகிழ்ச்சியாக்குவார்.

**கர்த்தரின் பணியில்**
**Pr. T.V. பீற்றர்**

---

## போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் – போன்: 97224276

இடி பெருவெள்ளம் கல்மழையினாலும்; தமது புயத்தின் வல்லமையைக் காண்பிப்பார். -ஏசா. 30:30

# குணசாலியே!

குணசாலி என்றால் ஆங்கிலத்தில் Virtuous, Noble, Quiet என்று பொருள். வேதத்தின் அடிப்படையில் பரிசுத்த வாழக்கை வாழ்கிறவர்களை குணசாலி என்று அழைக்கலாம். இந்த பட்டம் பெண்களுக்கு மாத்திரமல்ல ஆண்களுக்கும் பொருந்தும் (ஆதி. 25:27 – யாக்கோபு). ஒரு தாய் (பத்சேபாள்) தன் மகனுக்கு (சாலமோனுக்கு) கூறும்போது **"நீ ஒரு குணசாலியான பெண்ணை உனக்கு மனைவியாகக் கண்டு பிடிக்கவேண்டும் அவள் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது"** (நீதி 31:10). குணசாலியான ஒரு ஆண் தனக்கு குணசாலியான பெண்ணைத் தேடவேண்டியதில்லை. ஏனென்றால் கர்த்தரே இந்த நன்மையை அவனுக்குத் தருகிறார். "புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு" ஒருவர் குணசாலி என்று போற்றப்படுவதற்கு அவருடைய பணமோ அந்தஸ்தோ அழகோ படிப்போ அவசியமில்லை. தேவனுக்குப் பயந்து அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதே அவசியம். வேதத்தில் தேவன் ரூத்திற்கு குணசாலி என்ற அந்தஸ்தைக் கொடுத்து ஆசீர்வதித்தார். ஏன்?

இவள் பிறந்த சந்ததியோ (மோவாப்) தேவனால் வெறுக்கப்பட்ட சந்ததி. பெருமையாக சொல்லிக்கொள்ள அவளிடத்தில் ஒன்றுமில்லை. ஆயினும் அவளோ தன் தகப்பன் வீட்டையும் அந்நிய தெய்வங்களையும் விட்டு இஸ்ரவேலின் தேவனிடத்தில் அடைக்கலம் புகுந்து இரட்சிப்பைப் பெற்றாள் (ரூத். 2:12). அதுமாத்திரமல்ல ரூத்தும், நகோமியும் வெவ்வேறு கலாச்சாரம்: வயது வித்தியாசமோ அதிகம்: இருவரும் விதவைகள்: இருண்ட எதிர்காலம்: ஆயினும் அவள் தன்மாமியாரிடம் கொண்டிருந்த உறவைப்பாருங்கள் **"மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை என்னைவிட்டு பிரிக்காது"** என்றாள் (ரூத். 1:17) மெய்சிலிர்க்க வைக்கிறதல்லவா!. எத்துணை வியப்பூட்டும் மருமகள்–மாமியார் உறவு பாருங்கள். நம் குடும்பங்களில் மாமியார்–மருமகள் உறவு எப்படி? நம்மை குணசாலி என்று கர்த்தர் அழைப்பாரா? ரூத் குணசாலியாயிருந்ததினிமித்தம் போவாஸ் மூலமாக தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களில் சிலவற்றை இங்கு தியானிப்போம்.

**1. நல்ல ஆகாரம் கிடைத்தது (Received Good Food):–** ரூத்திற்கு ஆகாரம் கொடுக்கப்பட்டது, சாப்பிட்டு திருப்தியடைந்து மீதத்தையும் எடுத்தாள் (ரூத். 2:14,17,18). நம் தேவன் எப்பொழுதும் நம்மைத் திருப்தியாக்கி மீதம் எடுக்க வைக்கிறவர் (5 அப்பம் 2 மீன்கள் – 12 கூடை மீதமிருந்தது. 7 அப்பம் சில சிறு மீன்கள் – 7 கூடை மீதமிருந்தது). போவாஸ் வேண்டுமானால் அளந்து கெடுக்கிறவராகயிருக்கலாம். ஆனால் இயேசுவோ இடம் கொள்ளாமற்போகுமட்டும் நமக்கு கொடுக்கிறவர். அல்லேலூயா!

**2. நல்ல எதிர்காலம் கிடைத்தது (Received Good Future):–** ரூத்திற்கு நல்ல ஆகாரம் கொடுத்த தேவன் அவளுக்கு நல்ல எதிர்காலத்தையும் தந்தார். எப்படி? குணசாலியான கணவனைத் தந்தார், மருமகளின் நலனில் அக்கறைகொண்ட குணசாலியான மாமியாரைத் தந்தார் (ரூத் 4:133:1). அவள் எதிர்காலம் எத்துணை சமாதானமுள்ளதாயிருந்திருக்கும் பாருங்கள்!. மாமியாராக நாம் எப்படியிருக்கிறோம்? மகனுக்கும், மருமகளுக்குமிடையேயுள்ள அன்பை பலப்படுத்துகிறோமா? (அ) அவர்களிடையே பிரிவினையுண்டாக்க முயல்கிறோமா?

இஸ்ரவேல் புத்திரரே; நீங்கள் முற்றிலும் விட்டுவிலகினவரிடத்தில் திரும்புங்கள். –ஏசா. 31:6

ரூத்தைப்போல நாமும் இயேசுவை ஏற்றுக் கொண்டு, நற்சாட்சியைக் காத்துக்கொண்டு, குணசாலியாய் வாழும்போது, நமக்கும் நல்ல எதிர்காலத்தைத் தந்து ஆசீர்வதிப்பார்

**3. நல்ல புகழ் கிடைத்தது (Received Good Fame):–** ரூத் தன் கணவனால் பகழப்பட்டாள் "உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது" (ரூத் 3:10) என்றான் போவாஸ். மாத்திரமல்ல ஊராரும் அயலகத்தாரும் கூட அவளைக் குணசாலியென்று போற்றினார்கள் (ரூத் 3:11). அவள் நடக்கை பரிசுத்தமாயிருந்தது. அவள் தன் ஆவியின் கனியை வெளிப்படுத்தி. எல்லாரோடும் அன்போடும், பண்போடும் நடந்திருப்பாள். அதன் விளைவைப்பாருங்கள் "ஏழு குமாரரைப்பார்க்கிலும் அருமையான மருமகள் ரூத்தென்று அங்கிருந்த ஸ்திரீகள் புகழ்ந்தார்கள்" (ரூத் 4:15). இன்றைக்கு நம்மைக்குறித்த சாட்சி எப்படியிருக்கிறது? நம் குடும்பத்தில் வேலையில் திருச்சபையில் அயல்வீட்டில் ஊரில் நம்மைக்குறித்து என்ன சொல்லுகிறார்கள்?. நம்மிலிருந்து வெளிப்படும் ஆவியின் கனியைக் கொண்டே நாம் எப்படிப்பட்டவர்களென்பதை மக்கள் கண்டுகொள்வர். நாம் எதை வெளிப்படுத்துகிறோம்?. எல்லாவற்றிற்கும் மேலாக இயேசு ரூத்திற்கு புகழ் சேர்க்க விரும்பி அவள் சந்ததியில் வந்து பிறந்து தன்னுடைய பிறப்பை நினைவு கூறும்போதெல்லாம் ரூத்தையும் நினைவு கூறும்படி செய்திருக்கிறார்.

பிரியமானவர்களே! Mother's Day –ஐ நினைவு கூறுகிற நாமும் ரூத்தைப் போல குணசாலியாக வாழ்ந்து மேற்கூறிய ஆசீர்வாதங்களை ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொள்வோமாக! ஆமென்.

**கர்த்தரின் கிருபையில்**
Sis. **பிரியா பிரேம்குமார்**



## மே மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. ஜரின் நிஷா கிரன்
Sis. சுகந்தி தம்புகுமார்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. சாந்தி
Sis. ஜோன் அசோக்குமார்
Sis. ஹெப்சி சாம்
Sis. மேரி கலா ஜெயக்குமார்
Sis. எப்சிபா ஸ்டீபன்
Sis. சுபா ஸ்டீபன்
Sis. செலின் டேவிட்
Bro. ஆல்பர்ட்
Bro. ஜாண்சன்
Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. மரகதம் ஸ்டீபன்
Sis. டாஃப்னி ஜெபசிங்
Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. ஜரின் சில்வியா ஆல்பர்ட்
Sis. பிரிஸ்கில்லா செங்குட்டுவன்
Sis. அனிதா தாஸ்
Sis. விக்டோரியா ராஜன்
Bro. இம்மானுவேல்
Bro. ஜாண்
Bro. தர்மர்

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் – போன்: 50659288

வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்: செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும். –ஏசா. 32:15

# வாள் (வசனம்) வீச்சு

## சந்தோஷம்

உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக: நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்: உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக (சங். 5:11).

ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்: உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு (சங். 16:11).

அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு: சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும் (சங். 30:5).

கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள் (சங். 126:5).

கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்: உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் (சங். 128:1–2).

கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்: நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்: சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்: சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம் (ஏசா. 35:10).

என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன் (யோவா. 15:11).

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது (ரோம. 14:17).



## மஞ்சளும் மருதாணியும்

**குவைத் பாட்டி**

**1. குளிக்கும்போது தாலிச்சரட்டில் மஞ்சள் பூசுவதால் கழுத்து மற்றும் மார்புப் பகுதியில் மஞ்சள் பட்டு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.**


**2. மருதாணி மூளையின் செயல் திறனை மேம்படுத்தும். எனவே அடிக்கடி மருதாணி இட்டுக் கொள்ளவது நல்லது.**

**3. மஞ்சளுடன் மருதாணியும் கலந்து உள்ளங்கையில் பூசுவதால் கருச்சிதைவு ஏற்படாது.**

**4. கை, கால்களில் மஞ்சள் பூசுவதால் பெண்களுக்கு மலட்டுத்தன்மை வராது.**

**- அஹமதி தமிழ் திருச்சபை**

கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி; கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர்; கர்த்தர் நம்முடைய ராஜா; அவர் நம்மை இரட்சிப்பார். -ஏசா. 33:22



# பதில் சொல்லுங்க

( தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும் )

1. ஏசாயாவின் இரண்டு மகன்களின் பெயர் என்ன?
2. எருசலேமை நோக்கி "நீ கட்டப்படு" என்று சொன்னது யார்?
3. கர்த்தருடைய தூதன் அசீரியரின் பாளயத்தில் எத்தனை பேரை சங்கரித்தான்?
4. தன்னை என்ன பலியாக ஒப்புக் கொடுக்கும் போது அவர் தமது சந்ததியைக் கண்டு நீடித்த நாளாய் இருப்பார்?
5. கொடுக்கப்பட்ட குமாரனுக்கு கொடுக்கப்பட்ட ஐந்து நாமங்கள் என்ன?
6. ஆண்டவரின் வஸ்திர தொங்கலால் எது நிறைந்திருந்தது? அவருடைய மகிமையால் எது நிறைந்திருக்கிறது?
7. பெருமையான கிரீடத்துக்கு கிடைப்பது என்ன? தங்கள் ஆலோசனையை கர்த்தருக்கு மறைக்கும்படிக்கு மறைவிடங்களில் ஒளித்து, நம்மை காண்கிறவர் யார் என்கிறவர்களுக்கு கிடைப்பது என்ன?
8. எதற்காக ஜீவ நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே கீத வாத்தியங்களை வாசித்துப் பாடுவோம்?
9. பரிசுத்த நாளாகிய ஓய்வு நாளிலே எதை பேசாமல் இருக்க வேண்டும்?
10. இந்த மூன்று காரியங்களை செய்கிறவனை கர்த்தர் நோக்கிப் பார்ப்பார். அவை எவை?
11. யார் என் பெலனும் என் கீதமும் எனக்கு இரட்சிப்புமானவர்?
12. எது பெலனான நகரத்திற்கு மதிலும் அரணுமாக இருக்கும்?
13. எப்பொழுது கர்த்தர் எகிப்தியரின் விண்ணப்பத்தைக் கேட்டு அவர்களை குணமாக்குவார்?
14. யாருடைய அதிகாரம் யாருக்குக் கொடுக்கப்படும்?
15. இருதயத்தில் எதை எண்ணினதால் கல்தேயரின் குமாரத்திமேல் தீங்கு உதித்தது?

குறிப்பு:- வேதாகமத்தில் ஏசாயாவின் புத்தகத்தில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 20-06-2014 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்: இவைகளில் ஒன்றும் குறையாது. -ஏசா. 34:16

---

# பழம் சாப்பிடுங்க

**கிவி பழம்**

கிவி பழத்தில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. வைட்டமின் சி சத்து அதிகம் உள்ளதால், உடல் எடையை குறைப்பதோடு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. சோர்வு, மன அழுத்தம், மாரடைப்பு ஏற்படாமல் பாதுகாக்கிறது. நீரழிவு நோயாழிகளுக்கும் சிறந்தது. மற்ற பழங்களைவிட கிவியில் ஒமேகா–3 என்ற கொழுப்பு அமிலம் அதிக அளவில் காணப்படுகிறது. இது வளரும் குழந்தைகளுக்கு மூளை வளர்ச்சியை அதிகரிக்கிறது.

– **அஹமதி தமிழ் திருச்சபை**

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஜெஸ்லி டேனியல்
- செல்வி. சாரா கிரேஸ் சாம்சன்
- செல்வி. பிரவீனா லாசர்
- செல்வி. ஆன்ஸிலி ஆல்பர்ட்சிங்
- செல்வி. சாரா ஆல்ப்ஸ் ஜேம்ஸ்
- செல்வி. ரேஷ்மா அசோக்குமார்
- செல்வி. நோயல் யோவா தாமஸ்
- செல்வி. ஜெய்னி டேனியல்
- செல்வி.ரெபேக்கா ஜாண்போஸ்க்கோ
- செல்வன். வெங்கடேஷ் ராஜன்
- செல்வன். ஃபீஸ்டஸ் ஃபெலிக்ஸ்
- செல்வன். கிங்ஸ்டன் ரிச்சர்ட்சன்
- செல்வன். ராயன் சதீஷ்குமார்
- செல்வன். ஜெய்ராஜ் விசு
- செல்வன். ஜேக்கப் ஜெயக்குமார்
- செல்வன். சாமுவேல் ஸ்டாலின்
- செல்வன். ஷெர்வின் சிவகுமார்
- செல்வன். ஜோஷ்வா ஜோசப்
- செல்வன். ஜோஷ்வா ஜாண்சன்
- செல்வன். ரனால்டோ ஜோசப்
- செல்வன். ஜாண் ஜெரமியா மில்லர்
- செல்வன்.சாம்சன் பிலிப் எசேக்கியல்
- சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
- சகோதரி. மேரி கலா ஜெயக்குமார்
- சகோதரி. நிர்மலா ஆ. யேசுதாஸ்
- சகோதரி. அனிதா ஜெஸ்டின்
- சகோதரி. டெய்சி ரோஸ் எபெநேசர்
- சகோதரி. எஸ்தர் விசு
- சகோதரி.இசைவாணி வில்கின்ஸ்சன்
- சகோதரி. வித்யாவதி ஜெயச்சந்திரன்
- சகோதரி. பிரமிதா ரூத் பிரிஜ்டா
- சகோதரி. பாக்கியா ரவிஜாண் பீற்றர்
- சகோ. மனோகரன். P
- சகோ. ஜாண் கெஸ்டன்
- சகோ. ஜெயக்குமார்
- சகோ. ஸ்டீபன். R
- சகோ. ஜீவா
- சகோ. ஜெஸ்டின்
- சகோ. வெங்கடேஷ் ஜெபராஜ்
- சகோ. டேனியல் எசேக்கியேல்
- சகோ. பால் புருஷோத்தமன்
- சகோ. கிரன் குமார்
- சகோ. பக்தராஜ்
- சகோ. மனோகரன்
- சகோ. அந்தோனி சாமி
- சகோ. பால் பாண்டியராஜ்

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. எஸ்றா டேனியல்
- திருமதி & திரு. பால் ஜெகநாதன்
- திருமதி & திரு. சதீஷ்குமார். E
- திருமதி & திரு. ஜாண் வெஸ்லி
- திருமதி & திரு. ஆ. ஜேசுதாஸ்
- திருமதி & திரு.டேவிட்ஜெயகுமார்
- திருமதி & திரு. ஜெயச்சந்திரன்
- திருமதி & திரு. ஐசக்துரை
- திருமதி & திரு. ஸ்டீபன். R

நீங்கள் பயப்படாதிருங்கள்; திடன்கொள்ளுங்கள்: இதோ; உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும்; உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்: அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள். _ஏசா. 35:4

# ஜூன் 2014 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 01-06-2014 | சகோ.ஜஸ்டின்சுந்தரராஜ் | சகோ. சுகுமார் |
| 08-06-2014 | சகோ. ஜெயசேகர் | சகோ. அற்புதராஜ் |
| 15-06-2014 | சகோ. ஸ்டாலின் | சகோ. அசோக்குமார் |
| 22-06-2014 | சகோ. அற்புதராஜ் | சகோ. விசு |
| 29-06-2014 | சகோ. கிறிஸ்டோபர் | சகோ. ஆசீர்வாதம் |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 06-06-2014 | சகோ. விசு | சகோ. ஸ்டீபன் |
| 13-06-2014 | சகோ. டேவிட்குமார் | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் |
| 20-06-2014 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27-06-2014 | குடும்ப ஆராதனை | |

சங்கிலி தொடர் ஜெபம்: 05-06-2014 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

முழு இரவு ஜெபம்: 12-06-2014 இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை

வாலிபர் கூடுகை: இடம், நேரம், தேதி பின்பு அறிவிக்கப்படும்

பெண்கள் கூடுகை: இடம், நேரம், தேதி பின்பு அறிவிக்கப்படும்

அவனவன் தன் தன் கிணற்றின் தண்ணீரைக் குடியுங்கள். _ஏசா. 36:17

# BREAKING NEWS

## Holiday Home work for Sunday School Children

**And that from childhood you have known the Holy scriptures, which are able to make you wise for salvation through faith which is in Christ Jesus (2 tim. 3:15).**

**Here is your holiday homework to enrich your Bible knowledge.**

| Class in Sunday School | Chapter to be memorized |
|---|---|
| Kinder | Psalm - 100 |
| Beginners | Ten Commandments (Refer Exodus 20: 1-17) |
| Primary | Psalm - 91 |
| Junior | Psalm - 34 |
| Intermediate | Psalm - 103 |

*Have a lot of fun & enjoy your holidays*

**Sunday School Teachers**
**St. Paul's Church, Ahmadi**

Note to parents:- Please encourage your children to memorize the Bible Verses.

## ANSWER FOR THE QUIZ (MAY)

| | |
|---|---|
| 1. Fear the Lord | Pro 3:7 |
| 2. When you listen to wisdom | Pro 1:33 |
| 3. Wisdom | Pro 4:7 |
| 4. Wisdom | Pro 3:13 |
| 5. An immoral woman | Pro 5:3, 4 |
| 6. Grace | Pro 3:34 |
| 7. Wicked | Pro 4:19 |
| 8. Fear the Lord and depart from evil | Pro 3:7 |
| 9. Lord | Pro 3:26 |
| 10. Instruction of your father & Law of your mother | Pro 1:8-9 |

நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு இதற்கு ஆதரவாயிருப்பேன் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் -ஏசா. 37:35



## மே மாதக் கேள்விகளுக்கு பதில்கள்

1. சத்தியத்தை, ஞானத்தை, உபதேசத்தை, புத்தியை – வாங்கு. சத்தியத்தை விற்காதே. நீதி. 23:23
2. நீதிமானுடைய வாய் ஜீவஊற்று நீதி. 10:11, இருதயத்தினின்று புறப்படும். நீதி. 4:23
3. மதியற்ற ஸ்திரீ நீதி. 9:13, 18
4. தகப்பனை பரியாசம்பண்ணி, தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை. நீதி. 30:17
5. மரணத்திற்கு ஒப்புவிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப் போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி. நீதி. 24:11
6. நீதிமான்களுடைய வேர் அசையாது. நீதி. 12:3, நீதிமான்களுடைய வேர் கனி கொடுக்கும். நீதி. 12:12
7. ஸ்திரீகளுக்கு நீதி. 31:3
8. ஞானம் – சகோதரி, புத்தி – இனத்தாள் நீதி. 7:5
9. தன் வாயையும் தன் நாவையும். நீதி. 21:23
10. மாயையையும் பொய் வசனிப்பையும் எனக்கு தூரப்படுத்தும். தரித்திரத்தையும், ஐசுவரியத்தையும் எனக்கு கொடாதிரும். நீதி. 30:8
11. ஐசுவரியம் உதவாது நீதி. 11:4
12. தரித்திரனும், கொடுமைக்காரனும் நீதி. 29:13
13. செம்மையானவர்களுடைய ஜெபம். நீதி. 15:8
14. கல், மணல் நீதி. 27:3
15. குணசாலியான ஸ்திரீ (நீதி. 12:4), பிள்ளைகளின் பிள்ளைகளை (நீதி. 17:6)

## சபையின் 2014-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

**“சத்தியம் உங்களை விடுதலையாக்கும்”**

யோவான். **8:32**

## CHILDREN THOSE WHO WROTE ANSWERS

Sheryn
Geophy
Geona Shamy
Hepsibha
Roshan
Raeshma
Noel
Lydia
Joseph Prince

உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்: உன் கண்ணீரைக் கண்டேன்: இதோ; உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன். -ஏசா. 38:5

மறக்கமுடியுமா!

# ஜாண் பேட்டன்

## (1824 — 1909)

ஆஸ்திரேலியாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள தென் பசிபிக் கடலிலுள்ள தீவுக்கூட்டங்கள், நியூ ஹைபரிட்ஸ் ஆகும். இத்தீவுகளில் வாழும் மக்கள் 18–ம் நூற்றாண்டு வரை மனிதர்களைக் கொன்று தின்னும் நரமாமிசப் பட்சினிகளாகவும் சமுதாயத்தில் அதிகம் பின்தங்கியும் வாழ்ந்து வந்தனர். இவர்கள் மத்தியில் சுவிசேஷம் சொல்ல சென்ற ஜாண் வில்லியம்ஸ் என்ற மிஷனெரியை அடித்து கொன்று அம்மக்கள் தின்று விட்டனர். அவரைத் தேடி வந்த மக்களிடம் அவரது எலும்புகளை மட்டும் கொடுத்தனர். 1839–ம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த இந்த நிகழ்ச்சி உலகத்தையே அதிர வைத்தாலும் பிரிட்டிஷ் ஸ்காட்லாந்து தேசத்தில் வாழ்ந்த கிறிஸ்தவ வாலிபர்கள் மத்தியில் ஒரு பெரிய சவாலை ஏற்படுத்தியது. பன்னிரண்டு வாலிபர்கள் அதே பகுதிக்கு நாங்கள் மிஷனெரிகளாகச் செல்வோம் என்று எழுந்து நின்றனர். அவர்களில் ஒருவர்தான் ஜாண் பேட்டன்.

ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்த இவர் 1824–ம் ஆண்டு ஒரு எளிய கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தார். தெய்வ பக்தியுள்ள இவரது தந்தை ஒரு வியாபாரி. இவரது வீட்டில் பரிசுத்த அறை என்ற ஒரு அறை இருந்தது. அதில் ஒருநாளில் மூன்று முறை இவரது தகப்பனார் சென்று தனது குடும்பத்திற்காகவும், ஸ்காட்லாந்து தேசத்திற்காகவும் ஜெபித்து வந்ததைப் பார்த்த ஜாண் பேட்டன், தானும் ஜெபிக்க ஆண்டவருடன் நெருங்கி ஜீவிக்கக் கற்றுக்கொண்டார். இவரது தாயும் விசுவாசத்தில் உறுதியுடன் தனது பிள்ளைகளை ஆண்டவருக்காக வளர்த்து வந்தார். ஒரு நாள் பேட்டனின் தந்தை வியாபார விஷயமாக வெளியூருக்குச் சென்றிருந்தபோது வீட்டில் இரவு உணவு இல்லாத நிலை. அந்நேரத்தில் பேட்டனின் தாய் பசியுடன் இருந்த பிள்ளைகளை அழைத்து தங்களது தேவைகளை பரமபிதாவிடம் சொல்லி ஜெபித்துவிட்டு சீக்கிரமே படுக்கைக்கு அனுப்பிவிட்டு, காலையில் உங்களுக்கு தேவன் உணவு தருவார் என்று உறுதியளித்தார். அடுத்த நாள் காலையில் இவர்களது வீட்டின் முன் உணவுப் பொருட்களால் நிரம்பிய ஒரு வண்டி நிற்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தனர் பிள்ளைகள். அவைகள் தங்களது அன்றையத் தேவைக்கென அறிந்து தாத்தா அனுப்பி வைத்தது என்று அறிந்து கொண்டனர். பேட்டனின்தாயோ தனது பிள்ளைகளைப் பார்த்து, பிள்ளைகளே! பரலோக தந்தையை நேசியுங்கள் விசுவாசத்துடன் ஜெபியுங்கள் அவர் நம் எல்லா தேவைகளைதயும் சந்திப்பார் என்று சொன்ன அந்த வார்த்தைகளை பேட்டன் என்றுமே மறக்கவில்லை.

தனது குடும்பத்தின் வறுமையின் காரணமாக பேட்டன் தனது 12–ம் வயதிலே பள்ளிப் படிப்பைவிட்டு தனது தகப்பனாரின் வியாபாரத்தில் உதவி செய்ய வேண்டியதாயிற்று. இந்நாட்களில் இவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருந்தார். தேவனின் ஊழியம் செய்ய அதிக ஆர்வத்துடன் ஜெபித்துக்கொண்டிருந்தார். அவரது வாஞ்சைக்கு ஏற்ப கிளாஸ்கோ நகரிலுள்ள வேதாகமக் கல்லூரியில் படிக்க அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டபோது சந்தோஷத்துடன் அதில் இணைந்து படிக்க ஆரம்பித்தார். படிப்பிற்கான செலவினை இவரே ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து அந்த

என் நாட்களிலாவது சமாதானமும் உண்மையும் இருக்குமே என்றான். -ஏசா. 39:8

வருமானத்தால் கட்டினார். கல்லூரியில் வேதத்துடன் மருத்துவத்தையும கற்றார். கல்லூரிக்கு அருகிலுள்ள பகுதியில் சமுதாயத்தில் பின்தங்கிய மக்கள் மத்தியில் ஊழியம் செய்தார். பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். அதில் குடிகாரர்களும் ஒழுக்க நெறியில் தவறினவர்களும் அடங்குவர்.

பத்து வருடங்களாக அழியும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்துடன் இருக்கிற இடத்தில் ஊழியம் செய்த பேட்டனுக்கு மறுமலர்ச்சியடைந்த பிரிஸ்பிடிரியன் சபையைச் சேர்ந்த ஒரு மிஷனெரி நியூ ஹைபரிட்ஸ் தீவுக் கூட்டத்தில் வாழும் ஆதிவாசிகள் பற்றியும் அவர்களது மத்தியில் பணிபுரியும் மிஷனெரியுடன் சேர்ந்து பணி புரிய ஒரு வாலிபன் தேவை என்று பகிர்ந்து கொண்டபோது ஆவியானவர் பேட்டனிடம் பேச ஆரம்பித்தார். இந்த மிஷனெரிப் பணிக்காக உன்னை அர்ப்பணி என்ற மெல்லிய சத்தத்தைத் தெளிவாகக் கேட்க நான் செல்கிறேன் என்று அர்ப்பணித்து எழுந்து நின்றார். பலர் இவரை சோர்வடையச் செய்தனர். ஒரு வயதானவர் சொன்னார். வாலிபனே அங்கு போகாதே உன்னை நரமாமிச பட்சினிகள் தின்றுவிடுவார்கள் என்றார். அவருக்கு பேட்டன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னார் வயதானவரே! நீர் இறந்து கல்லறையில் அடக்கம் செய்யப்படும்போது உம்மை புழுக்கள் தின்னும். நான் தேவப்பணி செய்து நரமாமிசப் பட்சினிகளால் தின்னப்பட்டாலும் சாதாரணமாக இறந்து புழுக்கள் என்னைத் தின்றாலும் வித்தியாசம் ஒன்றும் இல்லையே என்றார். பேட்டனுடைய பெற்றோரோ சந்தோக்ஷத்துடன் அவரை மிஷனெரிப்பணிக்கு அனுப்பி வைத்தனர். 1858–ம் ஆண்டு ஜாண் பேட்டன் திருமணமான தனது இளம் மனைவியான மேரி ஆனுடன் தன் 34–ம் வயதில் நியூ ஹைபரிட்ஸ் தீவுகளை நோக்கிப் பயணமானார்.

இத்தீவுக்கூட்டங்களில் வாழும் ஆதிவாசி மக்கள் கொடூரமான செயல்களைத் துணிந்து செய்பவர்கள். மனிதர்களை வேட்டையாடுவதும் கொல்லுவதும் மனித மாமிசத்தை உண்பதும் இவர்களுக்கு சதாரணமான செயல்கள். அசுத்த ஆவிகளுக்கு அதிகம் பயப்படுகிறவர்களாக இருந்ததினால் சூனியக்காரர்களுக்கு அதிக மதிப்பும் மரியாதையும் இருந்தது. இயற்கையான மரணத்தை நம்பாத இவர்கள் ஒரு நபர் மரித்து விட்டால் அவர் மரித்ததற்கான காரணத்தை அறியும்படி சூனியக்காரர்களை அழைத்து குறி கேட்பார்கள். இறந்த நபருக்கு பகைவன் யாராவது இருந்தால் அவனது பெயரை குறிசொல்லுகிறவன் சொல்ல, உடனே அவனைக் கொன்று விடுவார்கள். கொல்லப்பட்டவனின் குடும்பத்தினர் அவர்களுக்கு விரோதமாக எழ இன்னும் பல கொலைகள் தொடரும். கணவன் இறக்கும்போது மனைவியின் கழுத்தை நெரித்துக் கொன்று கணவனுடன் புதைத்து விடுவார்கள். வயதானவர்கள் வீட்டுக்குப் பாரமாகும்போது தடியால் அடித்தே கொன்றுவிடுவார்கள். இவர்கள் இயேசு என்ற நாமத்தை கேள்விப்படவே இல்லை. ஜாண் பேட்டன் இவர்கள் மத்தியில் பணிபுரிய வந்தபோது இரண்டு மிஷனெரிக் குடும்பங்கள் அதிக எதிர்ப்பின் மத்தியில்ஊழியம் செய்து சிலரை ஆண்டவருக்காக ஆதாயம் பண்ணியிருந்தனர். பணித்தளம் வந்து ஒரு வருடத்தில் இவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். குழந்தை பிறந்து 3 வாரமான போது இவரது மனைவி விஷக் காய்ச்சலில் பீடிக்கப்பட்டு 1859–ம் ஆண்டு மார்ச் 3–ம் தேதி இறந்து போனார்.

ஒரு வாரத்தில் குழந்தையும் இறந்து போனது. மன வேதனையில் நிறைந்தவராய் பேட்டன் இயேசும் அவரது ஐக்கியமும் எனக்கு இல்லாதிருந்தால் பைத்தியமாகியிருப்பேன் என்று சொன்னார். இவரது உயிருக்கும் எப்போதும் ஆபத்து காத்து இருந்தது. ஆதி வாசி மக்கள் இவரது எல்லா உடைமைகளையும் திருடிச் சென்றனர். சமைக்கக் கூட பாத்திரம் இல்லாமல் கஷ்டப்பட்டார். ஒருமுறை பேட்டனை மந்திரம் செய்து, கொல்ல முயன்ற இரண்டு சூனியக்காரர்கள், பேட்டனுக்கு ஒன்றும் சம்பவிக்காததைப் பார்த்து இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறிய விரும்பினார்கள். கிராமத்தில் நடக்கும் சாராயம் காய்ச்சுதல், வெடிமருந்து தயாரித்தல், புகையிலை வியாபாரம் போன்றவற்றை பேட்டன் எதிர்த்து வந்ததால் இவரைக் கொல்லுவதற்கு சில வியாபாரிகளும் முயற்சி செய்தனர். எதிர்ப்புகள் அதிகமாகவே பேட்டன் சில நாட்களுக்கு ஆஸ்திரேலியா சென்று, தனது ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், முன்னேற்றப்பணி செய்யவும் நேரத்தை செலவிட்டார். பிறகு தானாவுக்கு அருகில் உள்ள அனிவா என்ற தீவில் பணிபுரிய ஆரம்பித்தார். இங்குள்ள மக்கள் இவரை அன்புடன் ஏற்றுக்கொண்டனர். ஊழியமும் விரிவடைந்தது. வயதான கிராமத் தலைவனும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். மக்களுக்கு ஆடை யணிய சொல்லிக் கொடுத்தார். படிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தினார். ஏழு மைல் நீளமும், இரண்டு மைல் அகலமுமான சிறிய அனிவா தீவு முழுவதும் ஆண்டவரிடம் வந்தது. அனிவா தீவில் குடி தண்ணீர் இல்லாததை அறிந்து பேட்டன் மக்களின் உதவியுடன் கிணறு வெட்டினார். பூமியின் கீழிருந்து தண்ணீர் வருவதை ஆச்சரியத்துடன் பார்த்த மக்கள் பூமியின் அடியிலிருந்து மழை பெய்கிறது என்றனர். தண்ணீரை எடுத்துச் சுவைத்து பார்த்த தலைவனும் தனது மக்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றவும் தங்களது எல்லா விக்கிரகங்களையும் எரித்து, புதைக்கவும் உத்தரவிட்டான்.

*1899*–ம் ஆண்டு அனிவா மொழியில் புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்து வெளியிட்டார். பத்து வருட கடின உழைப்பிற்கு பின் பல தீவுகளில் சுவிசேஷம் வேகமாகப் பரவியது. இவரது தீவிர முயற்சியால் இரண்டு அனாதை விடுதிகள், பல ஆலயங்கள், பள்ளிகள் கட்டப்பட்டன. பெண் குழந்தைகளுக்கென தனி பள்ளியும் அமைக்கப்பட்டது. சமுதாயத்தில் குற்றங்களும் கொலைகளும் தீமைகளும் குறைய ஆரம்பித்தன. அனிவாத் திருச்சபை வளர்ந்து பெருகிற்று. சுதேச ஊழியர்களைப் பயிற்றுவிக்க ஒரு வேதாகம பயிற்சிப் பள்ளியும் அங்கு நிறுவப்பட்டது. அவர் இறுதி நாள் வரை அங்கு உழைத்து வேதத்தை முழுவதும் அனிவா மொழியில் மொழி பெயர்த்தார். தனது *73*–ம் வயதில்கூட தினமும் *3* ஆராதனைகளில் கலந்து கொண்டு செய்தி கொடுத்தார். நான் மரிக்கும் வரை இங்கு பணிபுரிவேன் என்றார். அநேக ஆதிவாசிகள் தேவனிடம் திரும்புவதை தனது சொந்த கண்ணாலே கண்டு *1909*–ம் வருடம் ஜனவரி *28*–ம் தேதி தனது *83*–ம் வயதில் மரித்தார். மிஷனெரிப் பணிக்காக முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட ஜாண் பேட்டன் வாழ்வின் மூலம் மனிதர்களைக் கொன்று தின்ற மக்களும் மாற்றப்பட்டனர். மரணம், இழப்பு, கடின சூழ்நிலை எதுவும் அவரது அர்ப்பணிப்பை அசைக்க முடியவில்லை. இப்படிப்பட்ட அர்ப்பணிக்கு நாமும் தயாரா!

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

நீ பயப்படாதே; நான் உன்னுடனே இருக்கிறேன்: திகையாதே; நான் உன் தேவன்: நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்: என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். -ஏசா. 41:10

# தெரிவியும்.. போதியும்... நடத்தும்....

**"கர்த்தாவே உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்: உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும். உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி என்னைப் போதித்தருளும்"** (சங். 25:4,5).

**1. தெரிவியும் (Show me):–** இரண்டு விதமான பாதைகள் இந்த உலகிலே காணப்படுகிறது. ஒன்று மோட்சத்துக்குப் போகும் பாதை – அது ஜீவ பாதை: மற்றொன்று நரகத்திற்கு கொண்டு போகும் பாதை – அதுதான் மரண பாதை. கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாய் இருக்கிறது. ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. இதைத் தெரிந்து கொள்வதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நம்முடைய மூளையை உபயோகித்தால் ஏமாந்து போய்விடுவோம். அதைத்தான் லோத்து செய்தான். பசுமையான பாதையை, பகுதியைத் தெரிந்தெடுத்தான் (சோதோம், கொமோரா). ஆனால் அது பாவம் நிறைந்து காணப்பட்டது. முடிவில் அக்கினி அதை பட்சித்துப் போட்டது. கர்த்தர் ஒருவரே சரியான பாதையை ஜீவ பாதையை நமக்குக் காட்ட முடியும். "நானே வாசல்" (யோவா. 10:9) என்று இயேசு சொன்னார். தேவனுக்கு விரோதமாக பாவம் செய்த ஆதாம் ஏவாளுக்கு கிடைத்தது முள்ளும் குருக்கும் நிறைந்த பாதை. சங்கீதக்காரனாகிய தாவீதைப் போல "தேவனே எனக்குத் தெரிவியும் (Show me) என்று கர்த்தரிடத்தில் கேட்போம். அவர் சரியான பாதையை நமக்குக் காட்டுவார்.

**2. போதியும் (Teach me):–** Show me என்றால் Just காண்பிப்பது. ஆனால் ஜீவ பாதையில் நடந்து போக நம்முடைய ஞானம் போதாது. அது நெருக்கமான பாதை. சிலருக்கு கணக்கு என்றால் தலைவலி வந்துவிடும். சிறந்த ஆசிரியரிடம் போனால் நன்றாக போதிப்பார்: சுலபமாக புரிந்துவிடும். ஜீவ பாதையில் நடந்துபோக சரியாக போதிப்பவர் நம் கர்த்தர் ஒருவரே. **"நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு காட்டுவேன். உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்"**(சங். 32:8) என்ற வசனத்தின்படி நம்மை போதித்து நடத்துவார். நாம் தேவனிடத்தில் கேட்போம், "ஆண்டவரே! ஜீவ பாதையில் நடப்பதற்கு கற்றுத்தாரும். எனக்குப் போதித்தருளும். அப்பொழுது வேத வசனங்களைக் கொண்டு அவர் நமக்கு போதிப்பார்.

**3. நடத்தும் (Lead me):–** அவர்தான் போதித்து விட்டாரே! அப்புறம் என்ன? நடக்க வேண்டியதுதானே. No, No: தனிமையாக நம்மால் இதை செய்ய முடியாது. தாவீது இதை நன்றாக அறிந்திருந்தான். எனவேதான் "நீர் என்னை நடத்தும்" என்று கேட்கிறான். "Lead" என்றால் முன்பாக செல்வது. ஆண்டவர் நமக்கு முன்னால் செல்ல வேண்டும். அவர் நமக்கு வழி காட்டுகின்ற ஒரு Guide ஆக மாத்திரமல்ல போதிக்கின்ற ஒரு ஆசிரியராக மாத்திரமல்ல நமக்கு முன் செல்கின்ற Leader ஆக இருக்க வேண்டும். அவருடைய அடிச்சுவடுகளை நாம் பின்பற்றி நடக்க வேண்டும். "மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்கு பின் செல்லுகிறது (யோபு. 10:4). கர்த்தர் என் ஆத்துமாவைத் தேற்றி தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார் (சங். 23:3). இஸ்ரவேலர்

கர்த்தர் பராக்கிரமசாலியைப்போல் புறப்பட்டு; யுத்தவீரனைப்போல் வைராக்கியமூண்டு; முழங்கிக் கெர்ச்சித்து; தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார். _ஏசா. 42:13

வனாந்தரத்தில் கன்றுக்குட்டி விக்கிரகத்தை உண்டுபண்ணி தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தார்கள். மோசே தேவனை நோக்கி ஜெபிக்கிறான்: "உம்முடைய வழியை எனக்கு அறிவியும்: உம்முடைய சமுகம் என்னோடே கூடச் செல்லாமற்போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்" தேவன் சொன்னார் என்சமுகம் உனக்கு முன்பாக செல்லும் (யாத். 33:13–15).

தேவன் நமக்கு ஜீவ பாதையைக் காட்டுகிறார்: ஜீவ பாதையில் நடப்பதற்கு போதிக்கிறார். மாத்திரமல்ல நமக்கு முன் சென்று வழி நடத்துகிறார். பரம கானானை அடைவதற்கு உதவி செய்கிறார். **"நீரே என் இரட்சிப்பின் தேவன்: உம்மை நோக்கி நாள் முழுதும் காத்திருக்கிறேன்"** (சங். 25:5) என்று சங்கீதக்காரனோடு சேர்ந்து சொல்லுவோம்.

**"ஜீவனுள்ள தேவனே வாரும்: ஜீவபாதையிலே நடத்தும்**
**ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றிலே ஜீவன் பெற என்னை நடத்தும்"**. ஆமென்: அல்லேலூயா!.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

---




## ஆரம்பம்

எந்த ஒரு செயலுக்கும் ஆரம்பம் மிக முக்கியம்
எதையும் திட்டமிட்டு ஜெபத்துடன் செயல்படுத்தி
இயேசுபிரான் துணையோடு ஜெயத்துடன் செய்து முடிக்க
எந்நாளும் முயன்றிடுவோம் வெற்றிக்கனி பறித்திடுவோம்

அற்பமான தொழுவத்தில் இயேசுபிரான் அவதரித்தார்
அரை ஆயுசும் வாழவில்லை எத்தனையாய் சாதித்தார்
ஆண்டவரின் பெலன் வழித்துணையாய் வரும்போது
ஆகாதது எதுவுமில்லை சோதனைகள் சாதனைகளாகும்

ஜனனம் என்பது இறைவன் தரும் நம்பிக்கை
ஜகம் உள்ளவரை ஜனனங்கள் தொடர்ந்திடும்
நம்பிக்கையுடன் வாழ்வை சீராக துவக்குவோம்
நல்லவர் இயேசு கிறிஸ்து நன்மைகளையே தந்திடுவார்

அல்பாவும் ஒமேகாவும் ஆதியும் அந்தமுமானவர்
அயராது இரவு பகல் எந்நேரமும் உழைக்கின்றவர்
அவர் துவக்கும் விசுவாசம் வாழ் வெல்லாம் தொடரட்டும்
ஆண்டவரின் நாமத்தில் அமையட்டும் நல் ஆரம்பம்.

**– ஸ்டாலின்**



## ஒரு ஊரில்

# நெஞ்சைத் தொட்டு சொல்லு

ஒரு செல்வந்தன் தன் காரை எடுத்துக் கொண்டு வேலைக்குப் புறப்பட்டார். டேப்ரிக்கார்டரில் ஒலித்த பாடலுக்கு இணையாக பாடி, ஆடி மகிழ்ந்து சென்று கொண்டிருந்த பொழுது, அவருடைய பாடலுக்கும் ஆடலுக்கும் ஆப்பு வைத்தது கார் டயர். கார் டயர் பஞ்சரானதால் அவரால் பாடவும் ஆடவும் ஓட்டவும் முடியவில்லை. சாலையின் ஓரமாக காரை நிறுத்தி, இறங்கி தன் கண்களை சுழலவிட்ட பொழுது அருகில் ஒரு மனநல மருத்துவமனையோடு சில கடைகளும் தென்பட்டன. தனக்குத் தேவையான கார் மெக்கானிக் கடை இல்லை. எனவே அவரே பஞ்சரான டயரை கழற்றி ஸ்டெப்னியை (மாற்று டயர்) மாட்டிவிடலாம் என முடிவு செய்தார். பஞ்சரான டயரின் நான்கு போல்ட்டையும் கழற்றி கீழே வைத்துவிட்டு ஸ்டெப்னியை எடுத்து வந்தார். வரும்போது சற்று நிலை தடுமாறி கழற்றி வைத்த நான்கு போல்ட்டின் மீது அவருடைய கால் வேகமாக மோதியது. வேதனை கொண்ட நான்கு போல்ட்டும் கோபமாக அருகிலிருந்த கழிவுநீர் (சிறிய சாக்கடை) ஓடைக்குள் மூழ்கி தன்னை மறைத்துக் கொண்டது. செய்வதறியாது தேள் கொட்டிய திருடன்போல் திகைத்து நின்றார் செல்வந்தன்.

திடீரென்று அங்கு தோன்றிய ஒருவர் 'என்ன பிரச்சனை' என்ற கேள்வியை முன் வைத்தார். செல்வந்தன் கேள்வி வந்த திசைநோக்கி திரும்பி, பாத அடி முதல் தலை முடிவரை தன் கண்களால் அளந்துவிட்டு, அது மனநல மருத்துவமனை நோயாளி என்று கண்டு கொண்டார். செல்வந்தனின் சிந்தனையில் ஓடிய எண்ணப்படி அவரை அந்த சாக்கடையில் இறக்கி நான்கு போல்ட்களையும் எடுத்துவிட தீர்மானித்தார். நடந்த சம்பவத்தை அவரிடம் அபிநயமாய் விளக்கினார். சம்பவத்தை கேட்டதும் அலட்சியமாய் செல்வந்தரை நோக்கிப் பார்த்தார் அந்த மனிதர். அந்த மனிதனின் பார்வையின் அர்த்தம் செல்வந்தருக்கு புரியவில்லை. செயல்படத் தொடங்கிய அந்த மனிதர் மற்ற மூன்று சக்கரங்களில் தலா ஒரு போல்ட்டை கழற்றி இந்த ஸ்டெப்னி டயருக்கு மாட்டி விட்டு, சற்று தொலைவில் உள்ள மெக்கானிக் கடைக்கு சென்று நான்கு போல்ட்களை வாங்கி எல்லா சக்கரத்திலும் மாட்டிக்கொள் என்றார். இவ்வளவு தெளிவாக இருக்கிறீர்களே, நீங்கள் எப்படி இந்த மருத்துவமனையில்! என்று இழுத்தார் செல்வந்தர். என்னை யார் என்று எண்ணுகிறீர்! என திருப்பிக்கேட்டார் அந்த மனிதர்.

**"இயேசு பிலிப்பு செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்: வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்" (மத். 16:13–16).**

**கர்த்தரின் கிருபையில்**
**அ.்.பியா ஆ. தாஸ்**

விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர்: அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது -ஏசா. 44:9

## ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
66021072

**பொருளாளர்**
சகோ. விக
97686317

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அற்புதராஜ்
60692485

# I FELL IN LOVE WITH JESUS
# BECAUSE HE LOVED ME
# WHEN I COULDN'T EVEN
# LOVE MYSELF

**சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்**

——(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait

ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

Church website: www.ahmaditamilcongregation.org
Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048

**Private Circulation only**